# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
## 2017 / 2018 (ஆகஸ்ட்/செப்டெம்பர்) - 2020)

**HYS: 4113 Sources of Sri Lankan History (Chronicles & Inscriptions)**
**HYS: 4113 இலங்கை வரலாற்றின் மூலங்கள் (இலக்கியங்களும் சாசனங்களும்)**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும், இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

## பகுதி - I

1. இலங்கை வரலாற்று எழுத்தியலின் பார்வையில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களை மேல்வரும் அம்சங்களில் உதாரணங்களுடன் விபரிக்குக.
   அ) பாளி இலக்கிய மரபு
   ஆ) பாளி இலக்கியங்களும் பிரித்தானியர் காலத் தொல்லியல் ஆய்வுகளும்
   இ) பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வு முயற்சிகள்
   ஈ) 1970 க்குப் பின்னரான தொல்லியல் கண்டுபிடிப்புக்கள் (5×4= 20 புள்ளிகள்)

2. இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.
   அ) கல்வெட்டுக்கள் வெளிப்படுத்தும் சமய நிலை
   ஆ) கல்வெட்டுக்கள் கூறும் அரச உருவாக்கமும் ஆட்சி முறையும்
   (10×2= 20 புள்ளிகள்)

3. இலங்கையில் ஆதிகால, இடைக்கால வரலாறு பற்றிய ஆய்வில் நாணயங்கள் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் அம்சங்களில் விபரிக்குக.
   அ) பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்கள்
   ஆ) அரச இலட்சனை பொறித்த நாணயங்கள்
   இ) நாணயங்கள் வெளிப்படுத்தும் அயல்நாட்டு வணிகத் தொடர்புகள்
   ஈ) நாணயங்கள் கூறும் சமய நிலை (5×4= 20 புள்ளிகள்)

## பகுதி - II

4. இலங்கையில் பூர்வீக வரலாறு பற்றிய பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகளை மீள்வாசிப்புக்கு உட்படுத்துவதில் தொல்லியற் சின்னங்கள் பெறும் முக்கியத்துவத்தினை ஆராய்க. (20 புள்ளிகள்)

5. “இலங்கையின் நாகரிக உருவாக்கம் பெருங்கற்கால பண்பாட்டுடன் தோற்றம் பெறுகின்றது.” இக்கூற்றினை பொருத்தமான சான்றாதாரங்கள் ஊடாக மதிப்பிடுக.
(20 புள்ளிகள்)

6. இலங்கையில் சோழர் ஆட்சி பற்றிய ஆய்வில் சாசனங்கள் பெறும் முக்கியத்துவத்தை பரிசீரனை செய்க.
(20 புள்ளிகள்)

7. கிழக்கிலங்கை வரலாறு பற்றிய ஆய்வில் கோணேசர் கல்வெட்டுப் பெறுகின்ற வரலாற்று முக்கியத்துவம் பற்றிக் கட்டுரை வரைக.
(20 புள்ளிகள்)